# தொழில் நுட்ப பயிற்சி மற்றும் தொழிற் கல்வியும்

## (இனம் - 18)

01. தொழில் நுட்பப் பயிற்சியானது மூன்று வெவ்வேறு நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தொழில் கல்லூரிகளும்/தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களும் முதல் இரண்டு நிலைகளுக்குரியன. அங்கே முறையே தொழில் நுட்பக் கல்விக்கான பட்டமும், பட்டயக் கல்விப் படிப்பும் அமையப் பெற்றுள்ளன. தொழிற் பயிற்சி நிறுவனங்கள் (தொ.ப.நி) தொழிற் பள்ளிகள் (தொ.ப.) மேல்நிலை வகுப்புகளில் (+2 நிலை) வாழ்க்கைத் தொழில் முறைப் பாடங்கள் ஆகியன மூன்றாம் நிலைக்குறியன. வெவ்வெறு வகையான தொழில்களையும் கைத்திறத் தொழில்களையும், தொழிற் பயிற்சி நிறுவனங்களிலும், தொழிற் பள்ளிகளிலும் பயிலும் வகையில் தொழில் நுட்பப் பயிற்சித் திட்டம் அமைக்கப்பெற்றுள்ளது. இந்தப் பகுதியில் கல்லூரிகளிலும் தொழில்நுட்பப் கல்வி நிறுவனங்களாலும் அளிக்கப்படும் தொழில் நுட்பக் கல்வி உட்பட மேல்நிலைக் கல்வியும் தொழில்கல்வியும் கருதப்பட மாட்டாது. தொழிற் பயிற்சி நிறுவனங்களாலும், தொழிற் பள்ளிகளாலும், மேல்நிலைப் பள்ளிகளாலும் அளிப்பதற்காக அமைக்கப்பட்ட தொழில் நுட்பப் பயிற்சியே மூன்றாம் நிலையாகக் கருதப் பெறும்.

0.2 16, 188 பேருக்குக் கல்வி அளிக்கும் திறனுடைய 52 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. 36 பொறியியல் தொழில்களுக்கும், 15 பொறியியல் அல்லாத தொழில்களுக்கும் இத்தகைய தொழிற் பயிற்சி நிறுவனங்கள் பாடத்திட்டங்களைக் கொண்டுள்ளன. 44, 344 பேருக்குக் கல்வி அளிக்கும் திறனுடைய அரசால் ஏற்பளிக்கப் பெற்ற 438 தனியார் சுய நிதித் தொழிற் பயிற்சி நிறுவனங்களும் உள்ளன. மேலும், இத்தகைய தொழிற் பயிற்சி நிறுவனங்கள் தவிர 5112 இருக்கைகளை உடைய 115 தனியார் தொழிற் பள்ளிகள் (இவற்றுள் 50 பள்ளிகள் அரசின் உதவியைப் பெறுபவை) உள்ளன. 9 பாடத்திட்டங்களுடன் கூடிய 3 மேம்பட்ட தொழிற் பயிற்சி மையங்களும் உள்ளன. இதுவரை 9729 கைத்திறத் தொழிற் பயிற்சியாளர்கள் இந்த மையங்களில் பயிற்சி பெற்றுள்ளனர். தொழில் பழகுநர் பயிற்சித் திட்டத்தின் கீழ் 1444 தொழில் நிறுவனங்களில் 15,000க்கும் அதிகமான கைத்திறத் தேர்ச்சி பெற்ற பயிற்சி பெற்ற மனித ஆற்றார்வத் தொழில் பழகுநர் பயிற்சி பெற்றுள்ளனர்.

தொழிற் பயிற்சி நிறுவனங்கள் / பள்ளிகள்

| தொழிற் பயிற்சி நிறுவனங்கள் / பள்ளிகள் | எண்ணிக்கை | திறன் |
|---|---|---|
| 1. மாநில அரசு | 52 | 16,188 |
| 2. தனியார் (சுய நிதியுடையவை) | 438 | 44,344 |
| 3. தனியார் மற்றும் அரசு உதவி பெற்றவை | 115 | 5,112 |

03. மேல்நிலைப் பள்ளிகளில் வாழ்க்கைத் தொழிற் கல்வி பயிற்றுவிக்கப் பெறுகிறது. வேளாண்மை, மனையியல், வணிகவியல், தொழில், பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல், பொது சுகாதாரம் போன்ற துறைகளுக்கான பல்வகைப் பாடத்திட்டங்களைக் கொண்ட 66 வாழ்க்கைத் தொழிற் பாடத்திட்டங்கள் அளிக்கப்படுகின்றன. வாழ்க்கைத் தொழிற்கல்வியை 1377 பள்ளிகள் அளிக்கின்றன. சற்றொப்ப 1.04 இலட்சம் மாணவர் வாழ்க்கைத் தொழிற் பாடங்களைப் பயிலுகின்றனர் ; இவ்வெண்ணிக்கை மேல் நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் 16 விழுக்காடு ஆகும்.

04. தொழிற் பயிற்சி நிறுவனங்கள் வாழ்க்கைத் தொழிற் கல்வி பள்ளி பாடங்கள் ஆகியன இம்மாநிலத்தின் பல்வேறு தொழில்களுக்கான வெவ்வேறு வகை தொழில் மற்றும் கைத்திறத் தொழில்களில் திறன் வாய்ந்த மனித

இயங்கு ஆற்றலையும் அளிப்பதில் பங்கேற்கின்றன. தவிரவும் திறன் வாய்ந்த பணியாளர் தாமே சொந்தமாகத தொழிலைமைத்துக் கொள்கின்றனர். மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பயிற்சி நிறுவனங்களும் தொழிற்பள்ளிகளும் நிறுவப்பெற்றுள்ளன. வாழ்க்கைத் தொழிற் பாடங்களும், தொடங்கப் பெற்றுள்ளன. இவை உள்ளாட்சிக்குட்பட்ட ஊரக நடவடிக்கைகள் அல்லவென்று மாநிலதிட்டக் குழு கருதப்பட்டவற்றுள் ஒன்றாகும். எனவே பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் கட்டுபாட்டிற்கு துவக்குதல், பராமரித்தல் மேலாண்மை ஆகியவற்றை மாற்றுவது இயலக்கூடியதன்று அல்லது தேவையுமன்று. இருப்பினும் தொழில் நுட்ப கல்வி நிகழ் திட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் சிறப்பாக நடைபெற ஆலோசனை வழங்குதல், மேற்பார்வையிடுதல் மற்றும் ஒருங்கிணைந்த ஆய்வு மேற்கொள்ளல் போன்ற பணிகளை உள்ளூராட்சி மன்ற அமைப்புகள் மேற்கொள்ளலாம். உள்ளூர் மனித ஆற்றலைக் குறிப்பிடுவதும் அவர்களுக்குத் தொழில் நுட்பப் பயிற்சி/ வாழ்க்கைத் தொழில் பயிற்சி ஆகியவற்றை உரிய நிறுவனங்கள்/மையங்கள்/பள்ளிகள் இவற்றுடன் இணைப்பதும் அடிப்படையில் எளிதாக இருக்கலாம். மேலும், மாவட்டத்தின் தேவைகளுக்கேற்ப தனித்திறன் வாய்ந்த மனித ஆற்றல் தேவைகளுக்காகத் திட்டமிடுதல், திட்டங்களைச் சீராய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல் வாழ்க்கைத் தொழிற்கல்வி பயிற்சிக்கான நடைமுறை திட்டங்கள் தொழில் பழகுநர் பயிற்சிகள் ஆகியவை மாவட்ட ஊராட்சிகளால் மேற்கொள்ளப்பெற வேண்டும்.

05. இந்த பின்னணியில் அறிவுரை, மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றிற்கான அதிகாரங்களை பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் 3 படிநிலைகளுக்காகப் பின்வருமாறு ஒப்படைக்க வேண்டுமெனப் பரிந்துரைக்கப் பெறுகின்றன.

**I. ஊராட்சிகள்**

| தொடர் எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | தொழில் நுட்பம் மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சிகளுக்குப் பொருத்தமான ஊரக மனித வள ஆற்றலைக் கண்டறிதல். | 1. தொடர்புடைய ஊராட்சிகளுக்காகத் தகுந்தவாறு குறிப்பிட்ட தொழில் மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சியின் பாட திடடதேவைகளைக் குறிப்பிடுதல். |
| | | 2. ஊரக இளைஞர்களிடையே தொழிற்கல்வி பயிற்சி மையங்கள் பள்ளிகள் மற்றும் தொழில்கள் குறித்து தகவல்களைப் பரப்புதல் |
| | | 3. தொழிற்கல்வி பாடத்திட்டங்களில் இணைத்தலும் மாணவர்களைச் சேர்ப்பதற்கு ஊக்குவித்தலும், வசதி ஏற்படுத்தலும். |
| 2. | தொழிற்பயிற்சி நிறுவனங்கள் / தொழிற்பள்ளிகளை நிறுவுதலும், பேணுதலும் | 1. அரசு/தனியார் தொழிற்பயிற்சி நிலையம்/தொழிற்பள்ளி நிறுவிட உதவிபுரிதல், மற்றும் ஊராட்சிகளில் உள்ள மேல்நிலை பள்ளிகளில் வாழ்க்கைக்கான தொழிற்கல்வி பாடத் திட்டங்கள் தொடங்களை பரிந்துரை செய்தல். |

## II. ஊராட்சி ஒன்றியம்

| தொடர் எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | ஊரக இளைஞர்களுக்குத் தொழில் நுட்பப் பயிற்சி அளித்தல் | 1. ஒருபுறம் தொழிற்பயிற்சி நிறுவனம், தொழிற்பள்ளிகள் மறுபுறம் ஊராட்சிகள் இவற்றிற்கிடையே தொழிற் பயிற்சிப் பாடங்களில் தகுந்த ஊரக இளைஞர்களைச் சேர்ப்பதற்குத் தொடர்புபடுத்துதல்<br>2. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பல்வேறு தொழில் / தொழில் முறை நிறுவனங்களுக்குத் தேவைப்படும் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற மனித ஆற்றலுக்கான திட்டத்தை வரைதல் |
| 2. | தொழிற்பயிற்சி நிலையங்கள் தொழிற்பள்ளிகள் ஆகியவற்றை நிறுவுதல் | 1. புதிய தொழிற் பயிற்சி நிலையங்கள் தொழிற்பள்ளிகள் நிறுவுவதற்குத் தேவைப்படுவனவற்றை மதிப்பீடு செய்தல், அம்மதிப்பீட்டை தகுதி வாய்ந்த அதிகாரக் குழுமத்திடமும் மாவட்ட ஊராட்சியிடமும் பரிந்துரைத்தல்<br>2. அந்த பகுதியலமைந்த மேல்நிலைப் பள்ளிகள் பங்கேற்கத் தேவையான வாழ்க்கைத் தொழிற் கல்விக்கான தொழில்கள்/ பாடங்களைக் குறிப்பிட்டுக் காட்டுதல்<br>3. ஊராட்சிப் பகுதியில் நடைபெற்று வரும் தொழிற் பயிற்சி நிலையங்கள்/ தொழிற் பள்ளிகளில் கட்டாயமாக இடம்பெறக் கூடிய பகுதி மற்றும் கைத் தொழில்களுக்கான பயிற்சி கல்வி பற்றிக் குறிப்பிட்டுக் காட்டுதல். |

## III. மாவட்ட ஊராட்சி

| தொடர் எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற மனித ஆற்றலுக்குத் தேவையான திட்டம் வகுத்தல் | 1. மாவட்டத்தில் நடைபெற்றுவரும் பல்வகை தொழில்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்குத் தேவைப்படும் பயிற்சி பெற்ற மனித ஆற்றல் கைத்திறத் தொழில்கள் குறித்து பயிற்சிக்கான திட்டம் வகுத்தலை மேற்கொள்ளுதல்.<br>2. மாவட்டத்தில் சுய வேலைவாய்ப்பு நோக்கங்களுக்காகத் தொழில் நுட்பப் பயிற்சி ஆற்றல் தேவைகளை மேற் கொள்ளுதல் |
| 2. | தொழிற்பயிற்சியையும் வாழ்க்கை தொழில் கல்வியையும் சீராய்வு செய்தலும் கண்காணித்தலும் | 1. கல்வி தொடர்பிலான நிலைக்குழு வாயிலாகத் தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் வாழ்க்கைத் தொழிற் கல்வியின் கீழ் செயற்படுத்தப்பட்ட பல்வேறு நிகழ் அமைதிட்டங்கள்/ செயல் |

| தொடர் எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| | | திட்டங்களைக் கால முறைப்படி சீராய்வு செய்வதனை மேற் கொள்ளுதல். |
| | | 2. மாவட்டத்தில் தற்போது நடை பெற்றுவரும் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்களின் செயற் பாடுகளைக் குறிப்பாக தொழில் பயிற்சி நிறுவனங்களில், தொழிற் பயிற்சி பள்ளிகளிலும் இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கண் காணித்தல் |

## சிக்கல்கள் / பின் விளைவுகள்

06. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடிப்படையில் நிருவாகமல்லாத, நிதி அல்லாத அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட வேண்டுமென்று மாநிலத் திட்டக் குழு பரிந்துரைத்துள்ளது. இவ்வதிகாரங்கள் முக்கியமாகத் தொழிற்பயிற்சி பெற்ற மனித ஆற்றல் திட்டமிடுதல் ஆகியவற்றுக்கானதாகும். தொழில் நுட்பப் பயிற்சியையும், வாழ்க்கைத் தொழிற்கல்வியையும் சீராய்வு செய்தல் மற்றும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களால் நடத்தப் பெறும் புதிதாகப் நிறுவப்பட வேண்டிய தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளிகள், மையங்கள், மற்றும் நிறுவனங்களின் தேவை குறித்து ஆராய்தல் ஆகியனவாகும். எனவே தற்போதுள்ள நிர்வாக, நிதி மற்றும் சட்டப்படியான அமைப்பில் எந்தவிதமாறுதலும் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.